செய்தி குறிப்பு எண்.97 நாள்.2.12.2009

## பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்களின் அறிக்கை

சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்துவதற்காக பொதுப் பாடத்திட்ட வரைவு இணையதளத்தில் 16.10.2009 அன்று வெளியிடப்பட்டது. பொதுப் பாடத்திட்ட வரைவு மாணவர்களின் சிந்தனைத் திறனை வளர்த்து, எதிர்கால சிக்கல்களை தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் விதமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாடங்களையே உள்ளடக்கி உள்ளது.

கல்லூரி பேராசிரியர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் கருத்துக்களையும் பெற்று பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையாக உள்ள மதச்சார்பற்ற தன்மையினைக் கருத்தில் கொண்டு பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

விழிப்புணர்வுப் பாடல்கள், மறுமலர்ச்சி பாடல்கள், வாழ்த்துப் பாடல்கள் ஆகியவை ஏற்கெனவே நடைமுறையில் உள்ள பாடத்திட்டத்தைப் போலவே பொதுப்பாடத்திட்ட வரைவிலும் இடம்பெற்றுள்ளன. இத்துடன் திருவாசகம், தேவாரம், நாலாயிர திவ்விய பிரபந்தம், பெரியபுராணம் மற்றும் தமிழ் காப்பியமான கம்பராமாயணமும் இறுதி செய்யப்பட்ட பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

இஸ்லாமியர் வருகை, அவர்களின் ஆட்சி முறை மற்றும் அவைகளின் தாக்கம் ஆகியவை இந்திய வரலாற்றின் ஒரு கூறாகும். இந்த அடிப்படையிலேயே அவற்றைப் பற்றிய பாடங்கள் வரைவுப் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளன. தந்தை பெரியாரின் பகுத்தறிவு மற்றும் சமுதாய சீர்திருத்தச் சிந்தனைகளை மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்ற அடிப்படையில் தந்தை பெரியாரின் கருத்துக்கள் மற்றும் அவரது வாழ்க்கை வரலாறு பொதுப் பாடத்திட்ட வரைவில் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் தற்பொழுது நடைமுறையில் உள்ள பாடத்திட்டத்திலும் தந்தை பெரியார் பற்றிய பாடம் இடம்பெற்றுள்ளது.

பொதுப்பாடத் திட்ட வரைவில் இந்து மதத்திற்கு எதிராகவோ அல்லது எந்த ஒரு மதத்திற்கும் எதிரான கருத்துக்களோ இடம்பெறவில்லை. அத்தகைய கருத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகக் கூறுவது தவறானதாகும்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9